திற்கு அருகே வெள்ளாற்றில் பாலம் கட்டுவதால் 8 மைல்களும், ஆக 23 மைல்கள் சென்னையிலிருந்து நாகை செல்ல குறையும் என்ற நிலை இருப்பதால் அங்கே பாலங்கள் கட்ட அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கிழக்குக் கடற் கரைச் சாலையை மேம்படுத்துவதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும், மத்திய சர்க்காரை உதவி கேட்டு இருக்கிறோம். முடிவான பதில்கள் எங்களுக்கு வரவில்லை. ஆனாலும், மூல கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

தலைமைச் செயலகத்திற்கு நேரடி போக்குவரத்து வசதிகள்.

*20 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு போதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்தோ, எழும்பூர் ரயில் நிலையத் திலிருந்தோ தலைமைச் செயலகத்திற்கு நேரடி பஸ் வசதி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

பேருந்து வழித்தடங்கள் உரிமம்

*21 வினா திரு. கோளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில் தற்போதுள்ள விதி முறைகளை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேருந்து வழித் தடங்கள் உரிமம் வழங்குவது பற்றிய தற்போது உள்ள விதிமுறை களில் பயனுள்ள மாற்றங்கள் ஏதேனும் செய்யலாமா என்பது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, 15 மைலுக்கு கீழே வழித்தடங்களை வழங்கும்போது, பெரிய பஸ் முதலாளிகள் வைத்திய 'வசதிகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிற விதிமுறைகளை உடனடியாக மாற்று வதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அடிப்படை வசதி கள்தான் வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள். நான் ஏற் கனவே குறிப்பிட்டதுபோல, அரசு இவற்றையெல்லாம் ஆலோ சித்துக் கொண்டு இருக்கிறது.